தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 92,145,416 பெறுமதியான ஹோமாகம பிடிப்பணையில் அமைந்துள்ள பாடசாலை புத்தக களஞ்சிய தொகுதியினை நிர்மாணித்துள்ள காணியின் சட்டரீதியான உரித்தினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். இந்த காணிக்கு உரியதாக ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளமையால் அதன் தீர்ப்பு கிடைத்த பின்னர் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என ஹோமாகம பிரதேச செயலாளர் குறிப்பிடப்பட்டுள்ளமை.	காணியின் சட்ட ரீதியான உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	காணி மற்றும் கட்டிடங்களை தனித்தனியாக கணக்கு வைப்பதற்கு பதிலாக ரூபா 98,898,638 பெறுமதியான காணி மற்றும் ரூபா 181,197,063 பெறுமதியான கட்டிடம் ஒரே கணக்கினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமை கூற்றினுள் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனித்தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். 2025 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது நிதி நிலைமை கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	நிதி நிலைமை கூற்றினுள் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனித்தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii)	அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிகள் மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள கூற்று (SA 82) ஆகியவற்றுக்கு இடையே 05 நிலையான சொத்து விடயங்களின் ரூபா 56,249,216 தொகையான வேறுபாடு நிலவியது.	ஏற்றுக்கொள்கின்றேன். சிகாஸ் தரவு கட்டமைப்பில் சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டு முதலே உள்ளீடு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த வருடத்தில் நிலவிய சொத்துக்கள் முன்னர் நிலவிய பெறுமதிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு சிகாஸ் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் 1963 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனால் இந்த இரு கணக்குகளிலும் சொத்துக்களின் பெறுமதிகளுக்கு இடையே வேறுபாடு காணப்படுகின்றமை, நிறுவனத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டு சொத்துக்கள் அல்லாத பெறுமதிகளிலும் முன்னர் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே இரு கணக்குகளினதும் சொத்துக்களுக்கு இடையே வேறுபாடு காணப்படுகின்றது மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் சிகாஸ் கட்டமைப்புடன் ஒப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளமை.	- மேற்படி-
(iv)	பொதுவான கல்வி நவீன மயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் திணைக்களத்திற்காக இருப்புப் புத்தகங்களின் முகாமைத்துவம், பகிர்ந்தளிப்பு மற்றும் பதிவேடுகளை பராமரித்து செல்லுதல் ஆகியவற்றுக்கான தன்னியக்க கணினி கட்டமைப்பினை அபிவிருத்தி செய்து நிறுவுவதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 8,022,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அது	ஏற்றுக்கொள்கின்றேன். இந்த செலவினை விடயமானது சிகாஸ் கட்டமைப்பின் ஊடாக சொத்து உருவாக்காத செலவின விடயம் ஒன்றாக காணப்படுகின்றமையால் இந்த செலவினங்கள் சிகாஸ் கட்டமைப்பில் சொத்துக்களின் Working Progress (நடைமுறை வேலை) இன்	நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளின் தீர்மானங்களுக்கு பொருண்மையான தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு

அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்கள் கணக்கில் மற்றும் திணைக்களத்தின் நிதி நிலைமை கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களினுள் நடைமுறை வேலையின் கீழ் இனங்காணப்பட்டு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கீழ் பதிவு செய்ய முடியாது என்பது. இந்த தன்னியக்க கட்டமைப்பிற்காக முழுமையான கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்பட்டு உரிய கட்டமைப்பு சுவீகரிக்கப்பட்ட பின்னர் திறைசேரியுடன் இணைந்து சொத்துக்களாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 113(6)(ஆ) இன் பிரகாரம் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் இருவரிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 389,633 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன், இந்த கடன் மீதி சுமார் 11 முதல் 23 வருட காலப்பகுதிக்கு உரியதாக காணப்பட்டது.	அந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.	கடன் பணத்தினை மீள அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(இ) வணிக முற்பணக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) செலவினங்களின் உச்ச எல்லை		
மீளாய்வாண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் செலவினங்களின் உச்ச எல்லை ரூபா 20,000,000,000 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூபா 8,577,841,837 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 11,422,158,163 தொகையான விலகலொன்று நிலவியது.	ஏற்றுக்கொள்கிறேன். டொலரின் விலை குறைவடைந்தமையால் கடுதாசி மற்றும் ஏனைய அச்சீட்டு பொருட்களின் விலைகள் குறைவடைந்த காரணத்தால் திறந்த பெறுகை நடைமுறையின் மூலம் தீர்மானிக்கப்பட்ட விலைகள் குறைவடைந்தமை மற்றும் 1, 6, 10 ஆம் தரங்களின் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் மொடியுல்களை அச்சிடுவதற்காக பாடப் புத்தகங்களை மீள பயன்படுத்துவதற்கு இடமளித்தமையின் அடிப்படையில் அச்சிடப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் செலவினங்கள் குறைவடைந்துள்ளது என்பது.	பாடப் புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துதல், புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பில் கருத்தில் கொண்டு அச்சிடப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது மற்றும் அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான எல்லை ஆகியவற்றுக்கிடையேயான விலகல்கள் குறைவடையும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) செலவு வைக்கப்பட வேண்டிய பெறுவனவின் ஆகக் குறைந்த எல்லை		
மீளாய்வாண்டுக்கு உரியதாக அங்கீகரிக்கப்பட்ட முற்பண கணக்கின் செலவு வைக்கப்பட வேண்டிய பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 20,000,000,000 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அந்த எல்லை ரூபா 8,500,000,000 ஆக திருத்தப்பட்டிருந்ததுடன், உள்ளபடியான மீதியானது ரூபா 8,843,651,466 ஆக காணப்பட்டதுடன் அதற்கமைய	ஏற்றுக்கொள்கின்றேன். பாடப் புத்தகங்களின் அச்சீடு மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பில் 126-1-2-4-1501 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் மற்றும் புத்தக விற்பனை நிலையங்களில் புத்தகங்களின் விற்பனை வருமானம் ஆகியவை இந்த கணக்கில் வருமானங்களாக கருதப்படுகின்றமை. பாட	- மேற்படி -

ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு ஆகியவற்றுடன் உள்ளபடியான மீதியை ஒப்பிடும்போது முறையே ரூபா 11,156,348,534 தொகையான விலகல் மற்றும் ரூபா 343,651,466 மறை பெறுமதியுடைய விலகல் நிலவியது.	புத்தகங்களின் செலவினங்கள் குறைவடைந்தமை ஆகிய காரணங்களால் ஆகக் குறைந்த பெருவனவு எல்லையினை அடைய முடியாது இருந்தமை.	

(iii) வரவு மீதியின் உச்ச எல்லை

மீளாய்வாண்டுக்கு உரியதாக அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் வரவு மீதிகளின் ஆகக்கூடிய எல்லை ரூபா 18,000,000,000 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் வரவு மீதிகளின் உள்ளபடியான பெறுமதி ரூபா 6,011,290,857 ஆக காணப்பட்டமையால் ரூபா 11,988,709,143 தொகையான விலகல்கள் நிலவின.	ஏற்றுக்கொள்கின்றேன். மேற்படி (i) மற்றும் (ii) விடயங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் ஆகக்கூடிய வரவு மீதிகள் எல்லையினை அடைய முடியாது உள்ளமை.	- மேற்படி -

(iv) பொறுப்புகள் தொடர்பான உச்ச எல்லை

மீளாய்வாண்டுக்கு உரியதாக அங்கீகரிக்கப்பட்ட முற்பட கணக்கின் பொறுப்புக்கள் தொடர்பான உச்ச எல்லை ரூபா 10,000,000,000 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் உள்ளபடியான பொறுப்புக்கள் ரூபா 1,364,619,468 ஆக காணப்பட்டமையால் ரூபா 863,538,053 தொகையான விலகல் நிலவியது.	ஏற்றுக்கொள்கிறேன். செலவின எல்லையின் பிரகாரம் அண்மைய வருடங்களின் அனுபவங்கள் மற்றும் உச்ச செலவின எல்லைகள் தொடர்பில் கருத்தில் கொண்டு ஆகக் கூடிய பொறுப்புக்களின் எல்லை தீர்மானிக்கப்பட்ட போதிலும் செலவினங்கள் குறைவடைந்தமை மற்றும் உரிய ஆண்டினுள் பெரும்பாலான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியுமானதாக இருந்தமையால் பொறுப்புக்கள் தொடர்பிலான உச்ச எல்லையை அடைய முடியாது இருந்தமை.	- மேற்படி -

(ஈ) கட்டுநிதி மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைசேரி மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 720,896 ஆக காணப்பட்ட போதிலும், அந்த மீதி நிதிக்கூற்றுக்களின் கட்டுநிதி கணக்குகள் கூற்றில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக தீர்க்கப்படாத கட்டுநிதிகளின் நிரலில் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த கட்டுநிதியான ரூபா 720,896 பெறுமதியானது 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக்கு அனுப்பப்பட்டிராத போதிலும், ‘‘அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரியின் புத்தகங்களில் காண்பிக்கப்படாத 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியான காசு மீதிகள்” இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கிறேன். அது அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரியின் புத்தகங்களில் காண்பிக்கப்படாத 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காசு மீதியின் நிரலில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது.	கணக்குகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(உ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். நிலையான சொத்துக்கள் பதிவேடானது தற்போது உரிய முறையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.	நிலையான சொத்துக்கள் பதிவேடு சிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பொருள் பதிவேடுகளில் இணங்கும் வகையில் நாளதுவரையாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஊ) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 7 கடன் கொடுத்தோருக்கு ரூபா 646,432,104 தொகை செலுத்த வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளபடியான மீதி உறுதிப்படுத்தல்கள் 6 கடன் கொடுத்தோர் மாத்திரம் சமர்ப்பித்திருந்ததுடன் அதற்கு அமைய கடன் கொடுத்தோர் மீது மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பித்த கடன் கொடுத்தோர் மீதிகளுக்கிடையே ரூபா 561,004,034 தொகையான வேறுபாடு நிலவியது. அதற்கமைய மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பித்திராத ரூபா 561,004,034 தொகையான கடன் கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	04 அச்சீட்டு நிறுவனங்கள் செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள 10 புத்தகங்களின் பெறுமதி 2024 திசெம்பர் மாதம் செலுத்தப்பட்டுள்ளது, அச்சீட்டு நிறுவனத்தின் 04 புத்தகங்களின் பெறுமதிகள் உள்ளடக்கப்படவில்லை என்பது, அச்சீட்டு நிறுவனத்திற்காக ரூபா 65,232,848 பெறுமதி செலுத்த வேண்டியமை, அரச அச்சீட்டுத் திணைககளத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் பதிவேட்டில் கல்வி அமைச்சுக்குரிய கொடுப்பனவுகளும் 213 செலவின விடயத்திற்குரிய செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை, அச்சீட்டு நிறுவனத்தினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள தொகையில் 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கு உரிய பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் எமது பதிவேடுகளின் பிரகாரம் அந்த ஆண்டுக்கு செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படவில்லை என்பது மற்றும் கடன் கொடுத்தோர் பெறுமதியினுள் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய கடன் கொடுத்தோர் பெறுமதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளமை.	கடன் கொடுத்தோர் மீதிகளில் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 பாடப்புத்தக முகாமைத்துவ நடைமுறையில் போதிய அளவிலான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் நிலவியமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1-11 தரங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்காக இலவசமாக பாடநூல்களை வழங்குதல் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியினுள் 10,096 தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள், 822 பிரிவேனாக்களுக்கு 412 வகையான பாடநூல்களுக்கு உரிய 172 மில்லியன் பிரதிகள் ரூபா 36,077 மில்லியன் செலவிடப்பட்டு பாடசாலை மாணவர்களிடையே இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. 1-11 ஆம் தரங்களுக்காக 2017 ஆம் ஆண்டு பாட புத்தகங்களை மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஆகக்கூடிய காலம் வரையிலும் 2008, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒரு வருடத்தில் அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களின் பிரதிகளில் 30 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான வீச்சினுள் அதற்கடுத்த வருடத்தில் மீண்டும் பயன்படுத்தப்பட வேண்டும் எனும் சுற்றறிக்கை மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2020-2024 காலப்பகுதிக்குரிய ஒட்டுமொத்த தரவு பரிசோதனையில் உள்ளபடியாக பாடப்புத்தகங்கள் அதற்கடுத்த வருடத்தில் மீண்டும் பயன்படுத்தும் சதவீதம் 08 முதல் 24 சதவீதம் வரையான குறைந்த வீதத்தில் நிலவியது. பாடப்புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துதல் தொடர்பில் 2008 ஆம் ஆண்டு முதல்	ஏற்றுக்கொள்கின்றேன். 2017 மார்ச் 23 மற்றும் 2020 செப்தம்பர் 28 ஆம் திகதிய சுற்றறிக்கைகள் தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் 2022 செப்டம்பர் 22 ஆம் திகதிய கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 29/2022 தற்போது செயல்படுத்தப்படுகின்றது. எனினும் பாடசாலையில் அமுல்படுத்தும் போது மாகாண வலய மட்டத்திலான கண்காணிப்பு நடைமுறையில் குறைபாடுகள் நிலவுகின்றன. வெளியிடப்பட்டுள்ள அனைத்து சுற்றறிக்கைகளையும் மீளாய்வு செய்து புதிய சுற்றறிக்கையொன்றினை வெளியிடுவதற்கும் அதற்கமைய செயற்படுவதற்கும் உத்தேசிப்பதாகவும் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை திருத்துவதற்கு புதிய சுற்றறிக்கை ஒன்று மற்றும் வழிகாட்டி ஒன்றினை வரைபாக்குவதற்கு ஆரம்ப கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.	வருடாந்தம் பாட புத்தகங்களில் அச்சிடப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கு முன்னர் திட்டமிடல் கட்டத்திலிருந்து அச்சீடு, பகிர்ந்தளிப்பு, விநியோகித்தல், மீள பயன்படுத்துதல் மற்றும் பாட புத்தகங்களின் அகற்றுதல் வரையும் நிதிக்கூற்றுகளில் அந்த நிலைமைகளை கணக்கு வைக்கும் வகையில் மற்றும் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்படக்கூடிய வகையில் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு இணைந்ததாக மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் உள்ளடங்களாக நிறுவன தலைவர்கள் மற்றும் பல்வேறு முகாமைத்துவ மட்டங்களுக்காக திட்டவட்டமான பணி பொறுப்புகள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைத்து கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு வேலை திட்டத்துடனான நடைமுறையொன்று

	சுற்றறிக்கைகளின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் பாட விதானம் மாற்றப்படும் வரையிலும் ஆகக்கூடிய இயலுமான அளவிலான காலத்திற்கு பாட புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் சுற்றறிக்கைகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆர்வத்தினை தூண்டும் வேலைத்திட்டமொன்று செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆரம்பம் முதலே பாட புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துதல் தொடர்பில் அதிகாரிகளின் போதிய கவனம் செலுத்தப்பட்டிராத காரணத்தால் அரச நிதி பெறும் பாலான அளவில் விரயமாக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அவதானிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 04 சந்தர்ப்பங்களில் பாடப் புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துதல் விதிக்கப்பட்ட விதத்தில் இடம்பெறாத காரணத்தால் ரூபா 2,192 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.	நிறுவப்பட்டு நிலைபேறான பிள்ளையொன்றை உருவாக்குவதற்கு அவசியமான எண்ணங்களில் மாற்றம் மற்றும் அரச நிதி விரயமாவதை தடுப்பதற்கு பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கிட்டு உத்தியோகத்தர் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்பட்டிராத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
154(6) அறிக்கையின் 1.6.1(ஆ)(i)	காணியின் சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்த வேண்டும்.	1.6.1(அ)(1)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2009 ஆம் ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட தேசிய கடுதாசி கம்பனியிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,431,012 தொகையானது கணக்காய்வு திகதியான 2025 மே 05 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.	ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பணத்தை பகுதிகளாக செலுத்துமாறு குறிப்பிட்டு அடிக்கடி கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 ஏப்ரல் 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலமும் நிலுவை பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலைகள் மற்றும் தொழில் முயற்சிகள் அமைச்சினால் 2024 ஏப்ரல் 23 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனியின் தலைவருக்கு அழைப்பினை மேற்கொண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை.	பெறவேண்டிய மீதிகளை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் இயலுமான அளவில் முழுமையாகவும் துல்லியமானதாகவும் தயாரிக்கப்பட வேண்டிய	செலவின விடயம் ஒன்றின் 100 சதவீதமான நிதியேற்பாடு 2024 ஆம் ஆண்டினுள் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் எஞ்சியிருந்தது என்பது.	நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	போதிலும் திணைக்களத்தினால் மீளாய்வாண்டுக்கு உரிய 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 84,947,800 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 36,869,414 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ஒரு செலவினை விடயத்தின் சேமிப்பானது 100 சதவீதமாக காணப்பட்டதுடன் 14 செலவின விடயங்களின் சேமிப்பு 13 சதவீதம் முதல் 60 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்கமைய நடைமுறைக்கு சாத்தியமான நிலைமைகளிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் நலிவான மதிப்பீடுகள் ஆகியன மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த நிதியேற்பாட்டில் 22 சதவீதம் எஞ்சி இருந்தமைக்கு அடிப்படை காரணமாக அமைந்திருந்தது.		
(ii)	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மின்சாரம் மற்றும் நீர் செலவின விடயங்களில் முறையே ரூபா 2,850,000, ரூபா 3,500,000 மற்றும் ரூபா 6,000,000 எனுமாறு தேறிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செலவினங்கள் முறையே ரூபா 2,240,435, ரூபா 1,500,000 மற்றும் ரூபா 2,399,652 ஆக காணப்பட்டதுடன் அதற்கமைய சேமிப்பானது 20 சதவீதம், 57 சதவீதம் மற்றும் 60 சதவீதமாக காணப்பட்டது. சேமிப்பிற்கான காரணங்களாக ‘‘கல்வி அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்திலேயே கல்வி வெளியீட்டு திணைக்களம் அமைந்திருந்த காரணத்தால் மின்சார செலவினத்தை கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை’’ என மூன்று வருடங்களிலும் ஒரே காரணம் குறிப்பிடப்பட்டிருந்தமை மற்றும் தொடர்ச்சியான கவனயீனத்துடன் நிதி ஒதுக்கீடு	கடந்த வருடங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மின்சாரம், நீர் ஆகியவற்றுக்காக 2025 ஆம் ஆண்டில் தனித்தனியாக காலாண்டு ரீதியான நிதி ஏற்பாட்டினை வழங்கும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்சார் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு 2025 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளுக்காக நிதி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	- மேற்படி -

மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நீர் மற்றும் மின்சாரத்திற்காக கல்வி அமைச்சு மற்றும் கல்வி வெளியீட்டு திணைக்களம் ஆகிய 02 நிறுவனங்களுக்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை, நிதியேற்பாட்டிலான சேமிப்பிற்கு காரணமாக அமைந்திருந்தது. இவ்வாறு நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், அரச நிதி முகாமைத்துவத்திற்கு பாதகமான தாக்கம் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்திருந்தது.		

3.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,148,234 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராதத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் அந்த பொறுப்புக்கள் அமைச்சினால் இனம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சினாலும், ரூபா 2,148,234 தொகையான பொறுப்புக்கள் இனம் காணப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பெறுமதிகள் 213 செலவினை விடயத்திற்கு உரியதாக நிதி கூற்றுகளில் காண்பிக்கப்படாமைக்கு அவை 126 செலவின விடயத்திற்கு உரிய செலவினம் என்பதால் ஆகும். கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் இருந்து கணக்குகளில் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் கடந்த ஆண்டுக்கு உரியதாக செலத்தப்பட்ட பெறுமதிகள் மாத்திரம் முற்பணக் கணக்கில் பொறுப்புகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது.	அனைத்து பொறுப்புகளையும் உரிய முறையில் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைப்பதற்கு மற்றும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 இலக்கமுடைய பொது நிதி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் படி, எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டம் நடப்பு ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், 2024 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கான கல்வி அமைச்சின் செயலாளரின் ஒப்புதல் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முதல் வரைபு 2023 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட விதிகள் - 2024 இன் படி தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தை உரிய திகதியில் செயலாளரிடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க முடியவில்லை, மேலும் எதிர்காலத்தில் பணிகளை உரிய திகதியில் மேற்கொள்ள தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு கல்விச் செயலாளரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.	எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், நடப்பு ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ii)	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்தியின் வழிகாட்டி இலக்கம் 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் ஆகியன வருடாந் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எற்றுக்கொள்கின்றேன். திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அது செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து விடுபட்டுள்ளது, மேலும் எதிர்காலத்தில் தொடர்புடைய சுற்றறிக்கையின்படி அது சரியாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 2025 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் தொடர்புடைய தகவல்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் ஆகியன வருடாந் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 உத்தேச அடைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பிடிபன களஞ்சியத்தில் 1, 6 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு விநியோகிக்கக் கிடைத்த 8,163,004 பாடப்புத்தகப் பிரதிகளில், 2025 சனவரி 26 ஆந் திகதியில் உள்ளபடியாக 2,695,812 பிரதிகள் அல்லது 33 சதவீதம் மட்டுமே பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன, மேலும் 5,467,192 பிரதிகள் அல்லது 67 சதவீதம் பாடசாலைகளுக்கு மேலும் விநியோகிக்க களஞ்சியத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் பள்ளி தவணையான 2025 ஜனவரி 27 ஆந் திகதி அன்று பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு பாடப்புத்தகங்களை விநியோகிக்கத் திணைக்களம் தவறிவிட்டது.	எற்றுக்கொள்கின்றேன். கல்விச் செயலாளரின் 2024 அக்டோபர் 02 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கிய கட்டளைக்கமைய 1, 6 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களை அச்சிட ஆரம்பிக்குமாறு 2024 திசெம்பர் 23 அன்று அச்சகத்திற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அதன்படி, களஞ்சியங்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்குவதற்கான கடைசி திகதி ஜனவரி 22 ஆகும். ஒரு நாளைக்கு விநியோகிக்கக்கூடிய புத்தகங்களின் எண்ணிக்கை சுமார் 2-3 லட்சம் ஆகும். 1, 6 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் தொடர்பான கொள்கை தீர்மானங்களை எடுப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் இந்த அவதானிப்புக்கு வழிவகுத்தது, மேலும் இது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விஷயமல்ல என்றும், 2026 ஆம் ஆண்டுக்கான பெறுகை நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக முதற்கட்ட கலந்துரையாடல்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.	பாடசாலையின் முதலாந் தவணை ஆரம்பிப்பதற்கு முன்பு பாடப்புத்தக விநியோகத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

4.3.1 பொதுவான கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் (GEMP) கீழ், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் இருப்பு முகாமைத்துவம், விநியோகம் மற்றும் ஆவண பராமரிப்பு தொடர்பான அலுவலக தன்னியக்க கட்டமைப்பை (Office Automation System) உருவாக்குவதற்கும் நிறுவுவதற்கும் ரூபா 14,200,000 ஒதுக்கப்பட்டது. இந்த செயற்திட்டம் 2023 மார்ச் 15 ஆந் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டு 2024 மே 15 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது, ஆனால் 2025 ஏப்ரல் 30 வரையிலும் 11 மாதங்கள் தாமதம் ஏற்பட்ட போதிலும் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை.	ஒவ்வொரு கட்டங்களுக்கும் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் இந்த செயற்திட்டத்தில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், செயலாற்றல் பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் காலாவதியானதால் கட்டம் 4 இற்கு பணம் செலுத்த முடியவில்லை என்றும், கல்விச் செயலாளரின் ஒப்புதலின்படி செயலாற்றல் பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு கட்டம் 4 மற்றும் கட்டம் 5 ஆகியவற்றுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், கட்டம் 6 இற்கு பணம் செலுத்துவதற்கு முன்பு இந்த கட்டமைப்பின் அனைத்து வேலைகளும் நிறைவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள செயல்பாடுகளின் பெறுகைகளை திட்டமிடல் கட்டம் முதல் இயக்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும், முன்னேற்றம் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் மீளாய்வாண்டினுள் எதிர்பார்க்கப்படும் செயல்திறனை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் (GEMP) கீழ் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு சொந்தமான 04 விற்பனை ஊக்குவிப்பு மையங்களில் புத்தகங்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையக் கட்டமைப்புகளை நிறுவுவதற்கான 2024 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 4,000,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும், மேற்கூறிய கட்டமைப்புகளை நிறுவுவதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தொடங்கப்படவில்லை.	எற்றுக்கொள்கின்றேன். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை ஊக்குவிப்பு மையங்களில் பட்டியல்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருளை (S-poss) விரிவுபடுத்துவதற்கான பெறுகைகள் செயல்முறையை மேற்பார்வையிட ஐந்து அதிகாரிகளைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டத்தில் கொடுக்கப்பட்ட அனைத்துத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, முன்னர் மென்பொருளை (S-poss) வாங்கிய நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது	- மேற்படி –

	பொருத்தமானதல்ல என்றும், இந்த விஷயத்தில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகளை கோருவது பொருத்தமானது என்றும், தொடர்புடைய தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகளை மீண்டும் பெறப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு எடுக்கப்பட்டபோது 2024 ஆம் ஆண்டு முடிவடையவிருந்ததால், அந்த ஆண்டு தொடர்பான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான காலம் காணப்படவில்லை என்பது.	

4.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள், பிணை வைக்க வேண்டிய அளவு மற்றும் பிணை வைக்க வேண்டிய முறை ஆகியவற்றை தீர்மானிக்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளருக்கு செயற்பட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தில் பொறுப்பு வகிக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் பிணை வைத்திருக்கவில்லை.	பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு பிணை வைப்பதற்கு உரிய பதிவேடுகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை.	அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 இழப்புகள் மற்றும் நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆகஸ்ட் 27 முதல் 2024 செப்டம்பர் 03 ஆந் திகதிக்கிடைப்பட்ட தினமொன்றில் கல்வி அமைச்சின் வாகன நிறுத்துமிடத்தில் திணைக்களத்திற்கு சொந்தமான LM – 8681 என்ற எண் கொண்ட லாரி நிறுத்தப்பட்டிருந்தது, மேலும் வாகனத்தின் இரண்டு பேட்டரிகள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக, நிதி பிரமாணங்களின் படி விசாரணைகள் நடத்தப்படவில்லை மற்றும் பொறுப்பான தரப்பினர் அடையாளம் காணப்படவில்லை.	விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்பது.	பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.6 புத்தக மெய்மையாய்வு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களையும், அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களையும் ஆராய்ந்ததில், 22 புத்தகங்கள் மிகுதியாகவும், 996 புத்தகங்கள் பற்றாக்குறையாகவும் இருந்தன.	ஏற்றுக்கொள்கின்றேன். பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பான பரிந்துரைகளைப் பெற ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கைகள் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பிடிபன களஞ்சியத்தில் இருப்பு பதிவுகளின்படி, பிரிவேனா புத்தகங்களின் 223,111 பிரதிகள் இருந்தன, ஆனால் பிரிவேனா புத்தக இருப்பு அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்படவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில், நாளேட்டுப் பதிவுகள் மூலம் முந்தைய ஆண்டின் ஆரம்ப இருப்பு மற்றும் அரசாங்க வருவாய்க்கு மாற்றப்பட வேண்டிய இலாப மீதியை கணக்கிற்கு சீராக்கம் செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட மெய்மையாய்வு அறிக்கைகள் பொறுப்புடன் வழங்கப்பட வேண்டும் மற்றும் பொருட்களின் கணக்கெடுப்பு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் இது தொடர்பாக ஒரு கட்டுப்பாடு நிறுவப்பட வேண்டும்.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

4.7.1 மேலதிக புத்தகங்களை அச்சிடுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மேலதிக புத்தகங்களைத் தயாரிப்பதில், புத்தகத்திற்கான கேள்வி மற்றும் புத்தகத்தின் தேவை உறுதிப்படுத்தப்படாமை, நிறைவு செய்வதற்கான காலக்கெடு வழங்கப்படவில்லை, புத்தகத்தின் பாடத்திட்டத்தின்படி துணைப் புத்தகத்தை அறிமுகப்படுத்துவதற்கான உண்மையான தேவையை முதலில் அடையாளம் காணாமலும், பெற வேண்டிய பொருத்தமான ஒப்புதலைப் பெறாமலும் மேலதிகப் புத்தகங்களை அச்சிடும் பணி தொடங்கப்பட்டது. மேலும், மேலதிகப் புத்தகத்தைத் தொகுப்பதற்கான தரநிலை, தரம் மற்றும் காலக்கெடுவின் அடிப்படையில் எந்தவொரு யதார்த்தமான வழிமுறையும் இல்லாமல் உத்தியோகத்தர்களுக்கு பணிகள் ஒதுக்கப்பட்ட அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	புத்தகத்திற்கான கேள்வி மற்றும் புத்தகத்தின் தேவையை உறுதிப்படுத்துவதன் மூலம் மேலதிக புத்தகங்கள் தற்போது தயாரிக்கப்படுகின்றன.	மேலதிக புத்தகங்களை அச்சிடுவதற்கான தேவையை அடையாளம் காண்பதில் இருந்து அவை அகற்றப்படுதல் வரை சூழ்நிலைகள் குறித்து வழிகாட்டுதலை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் 294 வகையான புத்தகங்கள் பிட்டிபன களஞ்சிய வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த புத்தகங்கள் அச்சிடப்பட்டு 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் அச்சிடப்பட்ட புத்தகங்களின் 34 சதவீதம் மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் அச்சிடப்பட்ட புத்தங்களின் 40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவானது களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன்.	-மேற்படி-